## தலைப்பு 285 – விவசாய திணைக்களம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 285 – விவசாய திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக ்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) பொறுப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய குறிப்பு இலக்கம் (iv) இன் பிரகாரம், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி இல் உள்ளவாறு பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளின் மீதி ரூபா. 163,688,502 ஆக காணப்பட்டாலும், திறைசேரியின் கணினி அச்சிடப்பட்ட (SA 92) இன் பிரகாரம் மீதி ரூபா. 93,333,499 ஆக காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன் | திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) வர்த்தக முற்பணக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா.136,010 ஆன கடன்பட்டோர் மீதியொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிக்கவெரட்டிய பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2024 இன் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியாக கடன் பட்டோர் மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ii) | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் போது அது வரையில் தேய்மானமாக காட்டப்பட்ட திரண்ட தேய்மான அளவானது தேய்மான ஒதுக்கக் கணக்கிலிருந்து கழித்து அகற்றப்பட்டிருப்பினும், மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த சொத்துக்களை | 2024 இன் கணக்கு களை தயாரிக்கும் போது சீராக்குவதாக | பெறுமானத் தேய்வு கணக்கீடு தொடர்பாக கட்டுப்பாட்டு |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கழித்து அகற்றும் போது (பரிமாற்றமும் உள்ளடங்களாக) குறித்த சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையினை கருத்தில் கொள்ளாமல் அது வரையிலான திரண்ட தேய்மானப் பெறுமானமான ரூபா 10,694,231 தொகையானது மீளவும் தேய்மான ஒதுக்கு நிதியக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | | முறைமையை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(இ) வருமான பெறுவனவு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு உள்நாட்டு உணவக தொழில் முயற்சியாளர்களிடமிருந்து கிடைக்கப்பட வேண்டிய ரூபா. 31,500 ஆன நில வாடகையானது கணக்கீடு செய்யப்படா திருந்ததுடன் 07 உள்நாட்டு உணவக தொழில் முயற்சியாளர்களிடமிருந்து 1 வருடம் தொடக்கம் 4 வருடம் வரையிலான காலம் வரையில் கிடைக்கப்பட வேண்டிய நில வாடகையினை அடையாளம் கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 24 ஜனவரி 12 ஆம் திகதிக்கு முன்னர் நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை ஒன்று திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக | பெற வேண்டிய அனைத்து வருமானங்களையும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**(ஈ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செலவினத் தலைப்பில் வரவு வைக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,053,541 ஆன இயந்திரங்கள்,உபகரணங்கள் மற்றும் ரூபா 10,305,475 ஆன கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன் எதிர்வரும் காலங்களில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | கையேற்கப்பட்ட அனைத்து சொத்துக்களும் நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ii) | மீளாய்வாண்டில் இறுதித் திகதி இல் உள்ளவாறு திணைக்கள பதிவேடுகளுக்கு அமைவாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களது கூட்டுத்தொகை ரூபா 15,088,842,880 என தகவல்கள் முன் வைக்கப்பட்டிருப்பினும் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் (ACA 06) அதன் கூட்டுத்தொகை ரூபா 29,340,698,361 எனக் காட்டப்பட்டுள்ளபடியால் ரூபா.14,251,855,481 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | தொழில்நுட்ப சிக்கலொன்றின் பேரில் சிகாசின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட மீதிகள் மற்றும் கொம்ப்ரோல் நாயகம் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பதிவுகளுக்கு இடையே வேறுபாடு காணப்பட்டது | கணக்கு மீதிகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களிற்கு அமைய 1235 கட்டிடங்கள் மற்றும் நிர்மாண அலகுகள், 28 போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் 371 காணித் துண்டுகள் உள்ளடங்களாக 1634 நிதியல்லாத சொத்துக்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அச்சொத்துக்களை மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கை இடுமாறு உப பிரிவு அறிவித்துள்ளதாக . | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (iv) | மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானமான ரூபா. 12,704,753 தொகை நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது, எனினும் குறித்த சொத்துக்களை அகற்றுவதில் ஏற்படும் வருமானம் அல்லது இழப்பானது நிதிக் கூற்றுகளுடன் சரி செய்யப்படவில்லை. மேலும் அகற்றப்பட்ட மூலதன சொத்துக்களது செலவானது கண்டறியப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக நடைமுறை ஒன்று தயாரித்து உரிய சீராக்கங்களை செய்து கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகளை சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**(உ) முற்பணக் கணக்கு மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளயாய்வாண்டின் நிதிச் செயலாற்றுகைக் கூற்று (ACA-F) மற்றும் திறைசேரியின் குறிப்புக்களின் முற்பண வரவுகள் கொடுப்பனவுகள் ரூபா. 8,556,948 தொகையால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | ஒக்டோபர் மாதத்தில் வரவாக பதிவு செய்யப்பட்டிருந்த பெறுமதிகள் திறைசேரி அச்சு குறிப்புகளில் செலவாக பதிவு செய்யப்பட்டமை இதற்கான காரணமாக இருந்தது | கணக்கு மீதிகள் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ii) | விவசாயத் திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட தற்போது தீர்த்து கலைப்பு செய்யப்பட்டுள்ள 02 வர்த்தக முற்பணக் கணக்குகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீதியான ரூபா 40,899,996 தொகை நிதிக்கூற்றில் காட்டப்படவில்லை. | அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 எல்லைகளை பின்பற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணங்கள 503(2) இன் பிரகாரம் விவசாய பண்ணை பராமரிப்பு மற்றும் விதை விற்பனை முற்பணக் கணக்கிற்கு வரவுப் குறுக்கு பதிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 11,989,882 ஆன கழிப்பனவுகள்.'. செலவினமாக கணக்கு வைக்கப்படாமை காரணமாக விவசாய பண்ணை பராமரிப்பு மற்றும் விதை விற்பனை முற்பணக் கணக்கில் ரூபா 950,000,000 ஆக இருந்த வரவு மீதிகளது உச்ச எல்லையானது ரூபா 11,859,129 இனால் மிகைக்கப்பட்டிருந்தது. | எல்லை திருத்தத்திற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாக | நிதிப் பிரமாணம் 503(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு செலவு விடயங்களுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டு எல்லைகளை மீறி பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்க முடியாதாயினும் 11 செலவு விடயத்தின் நிதி ஏற்பாட்டு எல்லைகளை மீறி ரூபா 1,270,445 ஆன பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தன. | அது தொடர்பாக அனைத்து பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தி உள்ளதாக | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்படுகின்றன.

**அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1947 இன் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 224 ஆம் பிரிவு | - | திணைக்களத்தின் 10 அலகுகளுக்குச் சொந்தமான 1954 ஹெக்டேயர் விஸ்தீரணம் கொண்ட காணிகளின் உரிமை கையேற்கப்படவில்லை | காணி கையளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 5.3 ஆம் பிரிவுகள் | 1,918,128 | அளுத்தரம விவசாய பிரதிப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் விற்பனை நிலையத்தினுள் பணம் முறைகேடாக கையாளப்பட்டமை கண்டறியப்பட்டு ஓராண்டிற்கு மேல் கடந்திருப்பினும் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை | தற்போது பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | - | | | |
| | நி.பி 177(1) | 1,509,218 | பிந்துனுவெவ தேனி அபிவிருத்தி அலகினால் அன்றாடம் பெறப்படும் வருமானங்கள் 29 சந்தர்ப்பங்களில் 04 தொடக்கம் 20 நாள் வரையில் தாமதமாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள் ளதாக | பிரமாணங்களின் பிரகாரம் வருமானம் வங்கியிலிடப்பட வேண்டும் |
| (ஈ) | 2022 திசெம்பர் 14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரமான அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் | | | | |
| | I ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 244 ஆம் விதி | - | இலங்கை விவசாய சேவையின் 34 உத்தியோகத்தர்களும், இலங்கை தொழில்நுட்ப சேவையின் 547 உத்தியோகத்தர்களும் எந்தவொரு இடமாற்றமும் பெறாமல் | 05 ஆண்டு களுக்கும் மேற்பட்ட சேவை புரியும் உத்தியோ கத்தர்களை இடம் மாற்றுவது தொடர்பாக எதிர்காலத்தில் | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு கோவை விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | |
|---|---|
| 05 முதல் 31 வருடங்கள் வரை ஒரே சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக கடமையாற்றியுள்ளனர். | நடவடிக்கை எடுப்பதாக | வேண்டும் |

### 2.3 வங்கிக் கணக்குளை செயற்படுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வங்கிக் கணக்குகள் தொடர்பான செல்லுபடியான காலம் கடந்த மொத்தம் ரூபா. 2,965,402 பெறுமதியான 61 காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இக்காசோலைகளை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | வவுனியா மற்றும் கரடியனாறு ஆகிய இரு உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகங்களிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் இனங் காணப்படாத பெறுவனவு ரூபா. 736,462,632 மற்றும் இனங் காணப்படாத கொடுப்பனவு ரூபா. 737,993,227 நிலுவைகள் தொடர்பான துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வங்கிக் கணக்குகளில் ஒவ்வொரு மீதிகளுக்குரிய அட்டவரணகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த விளைவு மட்டங்களை அடையாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலன்னறுவை அரச விதை உற்பத்தி விவசாயப் பண்ணையானது கடந்த 06 போகங்களில் ரூபா 5,226,734 செலவிட்டு 33,562 கி.கி ஏனைய மேலதிக உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய திட்டமிட்டிருந்த போதிலும் அதில் 5,979 கி.கி மாத்திரமே உற்பத்தி செய்ய முடியுமாகவிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியின் 18 சதவீதமாகும். | எதிர்காலத்தில் சிக்கல்களை தவிர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை நோக்கி அடைவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரிய இலக்கிடப்பட்ட விதை உற்பத்தியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கன்னொருவ காய்கறி விதை உற்பத்தி நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த காய்கறி விதைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் கடந்த 04 போகங்களில் கிடைக்கப் பெற்ற 5413 கி.கி விதைகளில் 2894 கி.கி விதைகள் பலவீனமான முளைக்கும் சாத்தியம் கொண்ட விதைகளாக கண்டறிந்து நீக்கப்பட்டிருந்தன. | விதைகள் முளைத்தல் பலவீனம் அடைவதற்கான காரணங்கள் அதிக அளவில் தாக்கமளிப்ப தாகவும் முளைக்கும் சதவீதம் காலங்கள் உடன் இணங்குவதாக | உரிய இலக்கிடப்பட்ட விதை உற்பத்தியை பெற்றுக் கொள்ள முடியாமைக்கான காரணங்கள் காரணமான குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | பிதுருதலாகலை அரச விதை உருளைக் கிழங்கு உற்பத்திப் பண்ணையில் கடந்த 03 போகங்களில் ரூபா 26,659,785 செலவு செய்து 247,500 கி.கி விதை உருளைக்கிழங்கு உற்பத்தி செய்ய திட்டமிட்டிருந்த போதிலும் அதில் 97,638 கி.கி மாத்திரமே உற்பத்தி செய்ய முடியுமாக இருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியின் 39 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் இருந்தது. | வெவ்வேறு காரணங்களின் பேரில் மதிப்பிடப்பட்ட அறுவடை குறைவடைந்ததாகவும் நூற்றுக்கு நூறு விதை கிழங்கு உற்பத்தி நடைமுறை சாத்து மற்றதாகவும் | உரிய இலக்கு இடப்பட்ட விதை உற்பத்தியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை (Outcome) அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 முதல் 2017 வரையான காலப்பகுதியில் முறையான தொழில்நுட்ப மதிப்பீடு ஏதும் இல்லாமல் ரூபா 93,518,508 செலவு செய்து நுவரெலியாவில் 05 விதை உருளைக்கிழங்கு உற்பத்தி பண்ணைகளில் அமைக்கப்பட்ட 05 மின்சார வேலிகளில் ரூபா 67,245,266 பெறுமதியான 03 மின் வேலிகள் பயன்படுத்தப்படாது 01 தொடக்கம் 07 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் தொடர்ச்சியாக பயன்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்தன. | போதியளவு பதவியணியினர் இல்லாமை காரணமாக பராமரிக்க முடியாமல் இருப்பதாக | அதிக கிரயமொன்று செலவாகும் செயற்திட்டத்தை முறையாக மதிப்பீடு செய்ய வேண்டும் |

### 3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் முன்னேற்றத்தை அடையாதிருந்த திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த 08 வருட காலங்களில் ரூபா 337,170,792 செலவிட்டு 10 பெரிய வெங்காய விதை உற்பத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் | பயிர்ச்செய்கைக்கு முன்வரும் விவசாயிகளின் அளவு குறைவடைந்தமை, ஒட்டுமொத்த பெரிய | சரியான ஆய்வின் பின்னர் செயற் திட்டங்கள் செயற்படுத்தப்பட |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டில் 98900 மெ.தொன் ஆக இருந்த உள்நாட்டு பெரிய வெங்காய விதை உற்பத்தியானது 2022 ஆம் ஆண்டாகும் போது 15840 மெ.தொன் ஆக சுமார் 83,060 மெ.தொன் அதாவது 84 சதவீதம் அளவினால் வீழ்ச்சியடைந்துள்ளது. | வெங்காய செய்கை குறைவடைந்தமையால் மொத்த பெரிய வெங்காய அறுவடை கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் கருத்தில் கொள்ளளவு வீழ்ச்சி அடைந்திருந்ததாக | வேண்டும் |

### 3.4 வெளிநாட்டு நிதியளிப்புத் திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையில் பெரிய வெங்காய விதைகளின் உற்பத்தி மற்றும் பயிர்ச்செய்கை நுட்பங்களை மேம்படுத்து வதற்காக 2015 தொடக்கம் 2020 வரையான 05 வருட காலத்தினுள் KOPIA நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 05 செயற்பாடு களுக்காக ரூபா. 203.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் தெரிவு பரிசோதனைக்கு அமைய அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டமானது முழுமையாக வெற்றியளிக்கவில்லை. | காலநிலை காரணங்கள் பொருளாதாரக் கொள்கைகள் எண்ணங்கள ரீதியான காரணங்கள் போன்ற வெவ்வேறு விடயங்களால் பயிர்ச் செய்கைக்காக விவசாயிகளை தொடர்பு படாமை காரணமாக இருந்ததுஇ | சரியான ஆய்வின் பின்னர் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் |

### 3.5 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொலன்னறுவை பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்காக அனுமதிக்கப்பட்ட ரூபா 800,000 என்ற பெறுகை எல்லையினுள் தொழிற்படும் நோக்கில் பெறுகை வழிகாட்டல் கையேட்டின் 2.14.1 ஆம் பிரிவுக்கு இணங்கும் விதத்தில் பகுதிகளாக பிரித்து 06 சந்தர்ப்பங்களில் ரூபா 11,659,563 பெறுமதியான பெறுகைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. | விவசாயத் திணைக்களத்தின் தொலை நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் என்பவற்றை நோக்கி இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டி கோவையின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) விரிவாக்கல் மற்றும் பயிற்சி பிரிவினால் செயல்படுத்தப்பட்டிருந்த சிறந்த விவசாய நடைமுறைகள் திட்டம் (GAP) மற்றும் மொனராகல நெலுள்ள காய்கறி மற்றும் பழங்கள் விநியோக நிலையத்தின் உபயோகத்திற்காக 2016, 2020, 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களில் ரூபா 4,145,559 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த 22 வகையான பொருட்கள் குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்ட தொழிற்பாடுகளுக்கு வழங்கப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் கன்னொருவ விவசாய வணிக அபிவிருத்திப் பிரிவில் பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தன. | எதிர்காலத்தில் பொதியிடல் நிலையங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொருட்களை நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) பொலன்னறுவை பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் இயந்திரவியல் பிரிவில் மின்சுற்று அமைப்பதற்காக 2021 திசெம்பரில் ரூபா 486,576 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் அது தொடர்பான பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமல் அலுவலகக் களஞ்சியசாலையில் 02 வருடங்களாக பயன்படுத்தப்படாத நிலையில் வைக்கப்பட்டிருந்தன. | மின்சுற்றினை விரைவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொருட்களை நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் |
| (இ) பிதுருதலாகலை அரச விதை உருளைக கிழங்கு உற்பத்திப் பண்ணையில் 2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மின்சார வேலிக்கு மேலதிகமாக 02 கம்பி கயிறுகளை பொருத்துவதற்காக 2014 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 941,750 பெறுமதியான பொருட்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | காணப்படும் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பயன்படுத்த முடியாதிருந்ததாக | நோக்கத்துக்குட்ப செயற்பாடுகளைள் நிறைவேற்றும் வகையில் கொள்வனவு செய்யப்பட வேண்டும் |

**3.6 நட்டங்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றின் (குறிப்பு (i)) பிரகாரம் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் | உரிய நிறுவனத்துடன் கூட்டணைக்கப்பட்டு பரிசோதனை நடவடிக்கை | பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | முற்றுப்பெறாத 1976 ஆம் ஆண்டு முதல் காணப்படும் ரூபா 106,934,291 பெறுமதியான நட்டங்கள் மற்றும் விட்டுவிடல்கள் தொடர்பான 437 நிகழ்வுகள் காட்டப்பட்டிருந்தன. முன்னெடுக்கப்பட்ட தெரிவுப் பரிசோதனைக்கு ஏற்ப நிதிப் பிரமாணம் 104 (3) விசாரணைகளின் நீண்டகால தாமதத்தின் காரணமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத ரூபா 47,938,490 கூட்டுப் பெறுமதியான 02 நிகழ்வுகளும் பெறுமதி அறியப்படாத 11 நிகழ்வுகளும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கன்னொருவ காய்கறி விதை உற்பத்தி மையத்தின் 2013 முதல் 2023 வரையான 10 ஆண்டு காலத்தினுள் முளைப்பு வீதம் பலவீனமான காரணத்தினால் தேராத ரூபா 44,332,526 பெறுமதியான 5699 கி.கி காய்கறி விதைகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 (4) பிரகாரம் நடவடிக்கை எடுத்து முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்களுக்குரிய பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் உரிய தரப்பினரின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை விரைவில் எடுப்பதாக | நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | நிதிப் பிரமாணம் 109 (1) பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்த ரூபா 13,188,887 பெறுமதியான நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பில் நி.பி 108 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் போது அமைச்சு செயலாளர் அனுமதிக்கு அனுப்பிவைக்கப்பட்டு உள்ளதாக | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.8 நிதி முறைகேட்டுத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பலாந்தோட்டை அரச விதை உற்பத்திப் பண்ணையினுள் மலசலகூட அமைப்பொன்றை நிர்மாணிப்பதற்காக வேலைத்தளத்திற்கு பொருட்கள் மற்றும் தொழிலாளர் ஊழியம் என்பன வழங்கப்படாத நிலையில் அதற்காக வேண்டி ரூபா 346,850 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தற்போது நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக | செய்யப்பட்ட வழங்களுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | அம்பலாந்தோட்டை அரச விதை உற்பத்திப் பண்ணைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதியின் கூரையை திருத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,021,376 | எஞ்சிய அனைத்து பொருட்களும் இருப்பு பதிவேடுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளதாக | முறையான அங்கீகாரத்தின் பேரில் வெளிப்படையாக நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான பொருட்கள் உபயோகப் படுத்தப்படாதிருக்கையில் வழங்கலாக களஞ்சிய பதிவேடுகளில் பதிவுகள் இடப்பட்டிருந்தன. | | எடுக்கப்பட வேண்டியதுடன் தாபன விதிக் கோவையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |
| (இ) | அம்பலாந்தோட்டை அரச விதை உற்பத்திப் பண்ணையின் வளவை ஒளியேற்றும் விதமாக ரூபா 690,140 செலவில் சூரிய மின் சக்தியில் இயங்கும் 10 வீதி விளக்குகள் நிறுவப்பெற்றில்லாத நிலையில், குறித்த கட்டுமானங்கள் நடைபெற்றதாகவும், அவை சரியானவை எனவும், எதிர்பார்க்கப்பட்ட நிலையில் உள்ளன எனவும், பண்ணை முகாமையாளர் மற்றும் விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தின் இயந்திரப் பொறியியலாளர் ஆகியோரால் குறிப்புகள் இடப்பட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி முன்வைக்கப்பட்டிருந்தன. | தற்போது அனைத்து அனைத்து பொருத்திகளும் பூர்த்தி செய்யப்பட்டு செயற்பாட்டு நிலைமையில் காணப்படுவதாக | முறையான அங்கீகாரத்தின் பேரில் வெளிப்படையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் தாபன விதிக் கோவையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | அம்பலாந்தோட்டை அரச விதை உற்பத்திப் பண்ணையின் 02 ஆம் இலக்க விதைகள் உற்பத்தி அலகிற்காக வேண்டி ரோலர் கதவு ஒன்றினை பொருத்துவதற்காக வேண்டி 2023 திசெம்பர் 29 ஆம் திகதி ரூபா 324,425 தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், 2024 ஜனவரி 18 ஆம் திகதி வரையில் குறித்த ரோலர் கதவு பண்ணைக்கு வழங்கப்படவோ பொருத்தப்படவோ இல்லை. | தற்போது அனைத்து அனைத்து பொருத்தல்களும் பூர்த்தி செய்யப்பட்டு செயற்பாட்டு நிலைமையில் காணப்படுவதாக | முறையான அங்கீகாரத்தின் பேரில் வெளிப்படையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் தாபன விதிக் கோவையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |
| (உ) | போம்புவல நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 32 சீமெந்து மூடைகள் நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காக விநியோகிக்கப்பட்டதாக பதிவுகள் இடப்பட்டு அவை நிறுவனத்தில் கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்களினால் தமது தனிப்பட்ட உபயோகத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | இது தொடர்பாக ஆரம்ப புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக | உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாயத் திணைக்களத்தினால் நெல், காய்கறிகள் மற்றும் ஏனைய வயற் பயிர்கள் உட்பட 30 வகையான பயிர்களின் உற்பத்திப் பரப்பின் அடிப்படையில் ஒவ்வொரு 02 வாரங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் பயிர் எதிர்வு கூறல் அறிக்கைகள் மற்றும் முன்கூட்டிய அறிவிப்புகளுக்குப் பயன்படுத்தப்படும் முதன்மைத் தரவுகளை பெற்றுக் கொள்ளும் தரவு மூலங்கள் மற்றும் முறைகளில் காணப்படும் ஒழுங்கின்மை மற்றும் கண்காணிப்புப் பலவீனங்கள் காரணமாக பயிர் எதிர்வு கூறல் அறிக்கைகள் மற்றும் முன்கூட்டிய அறிவிப்புகளின் துல்லியத் தன்மை குறித்து கணக்காய்வின் போது சர்ச்சைக்கரியதாக இருந்தன. | தரவுகளில் சரியான தன்மையை மேம்படுத்துவதற்காக புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தவுதற்கு உள்ளதாக | தேசிய பொறுப்புடன் கூடிய வெளிக்களம் தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | நி.பி 751 மற்றும் 753 ஆம் பிரிவுகளுக்கு அமைவாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 15,200,000 பெறுமதியான 400 கையடக்க தொலைபேசிகளை களஞ்சிய பதிவேடுகளில் பதிவுகள இடப்படாமல் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய முறை தொடர்பாக உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | நி.பி 751 மற்றும் 753 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | கன்னொருவ காய்கறி விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி நிலைய பணிப்பாளரின் அங்கீகாரத்தின் கீழ் 2011 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் 41 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 8,826,554 பெறுமதியான 1867 கிலோ கிராம் விதைகள் வெவ்வேறு அரச நிறுவனங்களுக்கு 02 வார சலுகைக் காலத்துடன் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு கடன் அடிப்டையில் விதைகள் வழங்கப்பட்டு தற்போது 1 தொடக்கம் 12 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருப்பினும் குறித்த கடன் பெறுமதியை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

**4.1**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிலையான அபிவிருத்தி இலக்குகளையும் அதனுடன் தொடர்புடைய 03 குறிகாட்டிகளையும் இனம் கண்டிருந்த போதிலும் 2030 ஆம் ஆண்டளவில் குறித்த இலக்குகளை அடைவதற்காக தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமோ அல்லது அடையாளம் காணப்பட்ட குறிகாட்டிகளின் செயன் முன்னேற்ற அறிக்கையோ கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | 2023 சிறு போகத்தின் வருமான செலவின கூற்றுக்களின் கணக்கீடு முடிவடைந்த பின்னர் செயன் முன்னேற்றம் தொடர்பான விபரங்களை வழங்குவதாக | நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய ஆரம்பத் திட்டம் மற்றும் அதற்குரிய செயல் முன்னேற்றம் வருடாந்தம் அளவிடப்பட வேண்டும |

## 5. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியுடன் உள்ளவாறான பதவியணியை ஒப்பிடுகையில் 2795 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றில் சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களது அனுமதிக்கப்பட்ட 1050 பதவிகளில் 696 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் தொழில்நுட்பச் சேவையின் அனுமதிக்கப்பட்ட 1632 பதவிகளில் 557 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | தேவைப்பாடு இனங் காணப்பட்டு வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் ' இறுதித் திகதியில் 425 விவசாய ஆலோசகர்களுக்கான தேவை காணப்பட்ட நிலையில் பிந்துனுவெவ தேனீ அபிவிருத்தி நிலையத்திற்காக போதுமான அளவு பணி ஒதுக்கீடு இல்லாமல் 06 விவசாய ஆலோசகர்கள் இணைக்கப் பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ள தாகவும் அவர்களுக்காக கடமை பட்டியல் வழங்கப் பட்டுள்ளதாகவும் | வரையறுக்கப்பட்ட மனித வளங்களை முறையாக முகாமை செய்யப்பட வேண்டும். |